(ஆ) பயிரிடு குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979ம் ஆண்டு பயிரிடு குத்தகைக் தாரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவை'' பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்.

[முற்பகல் 10–00]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இதிலே ஒன்றை நான் குறிப்பிட வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்திலே வெளியே பாதுகாப்பு என்று போட்டிருக்கிறது. ஆனால் உள்ளே பார்க்கும் போது, நியாயவாரம் செலுத்துவது என்று ஆரம்பித்து, அதில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லப்படுகிறது. இன்னொன்றும் இருக்கிறது. அரசாங்க சொந்த நிலம் என்றா லும், லீஸ் என்றாலும், அரசாங்கக் கம்பெனி நிலம் என்றாலும் அதை யார் பயிரிட்டாலும் இந்தச் சட்டத்திலிருந்து அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக் கிறது. தனிப்பட்ட மனிதனுக்கு இருக்கும் உரிமை, அரசு அல்லது அரசு நிறுவனங்களைச் சேர்ந்த நிலம் என்றால் ஏன் பறிக்கப்படுகிறது? ஏன் எல்லாவற்றிற்கும் அரசாங்கம் 'ஃபேர் ரெண்ட்ஃபிக்ஸ்' செய்யக்கூடாது ?

ஹைகோர்ட் தீர்ப்பு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது என்ன தீர்ப்பு என்று தெரியவில்லை. சட்டத்தைக் கொண்டு வரும்போது ஹைகோர்ட் தீர்ப்பு இருக்கிறது என்றால், அது என்ன தீர்ப்பு என்பதை சட்டத்தில் சொல்ல வேண்டாமா ? ஒரு 'ஷார்ட் நோட்'டாவது கொடுக்க வேண்டாமா ? சட்ட மன்றத்திலே இருக்கிற நாங்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போய்க் கொண்டா இருக்கிறோம் ? அமைச்சருக்காவது அந்த தீர்ப்பு என்ன என்பது தெரியுமோ என்னவோ ? ஆனால் எங்களுக்கு தெரிய வேண்டுமானால் ஒரு ஷார்ட் நோட் கொடுக்க வேண்டும், அல்லது சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னால் அந்தத் தீர்ப்பு என்ன என்பதை அமைச்சர் சொல்லிவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர் கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.